Vol. 8 | Special Issue 1 | MARCH 2021

SHANLAX #SINCE1990

# Shanlax International Journal of Arts, Science and Humanities

(A Peer-Reviewed - Scholarly Indexed Quarterly Journal)

SIJASH NAAS Rated Journal
NAAS Score 2.13

பன்னாட்டுக் கருத்தரங்கம்

## நகரத்தார் – வாழ்வும் பணியும்



19.3.21 & 20.3.21

தமிழ்த்துறை

நாச்சியப்ப சுவாமிகள்

கலை அறிவியல் கல்லூரி

கோவிலூர், காரைக்குடி 630 307

(அழகப்பா பல்கலைக்கழக இணைவு பெற்றது)



தொகுதி 1


ISSN INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INTERNATIONAL CENTRE
PKP PUBLIC KNOWLEDGE PROJECT
OJS OPEN JOURNAL SYSTEMS
SHANLAX #SINCE1990 SHANLAX JOURNALS
editor@shanlaxjournals.com | www.shanlaxjournals.com

SHANLAX
#SINCE1990

# SHANLAX INTERNATIONAL JOURNAL OF ARTS, SCIENCE AND HUMANITIES

Vol. 8 Special Issue 1 March 2021

P-ISSN: 2321-788X Impact Factor: 3.025



நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரி
(அழகப்பா பல்கலைக்கழக இணைவு பெற்றது)
கோவிலூர், காரைக்குடி 630 307

தமிழ்த்துறை

நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கம் – 2021

## "நகரத்தார் – வாழ்வும் பணியும்"

தொகுதி I

# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|
| 1 | கவிஞர்கள் போற்றிய கல்வி வள்ளல் அழகப்பர்<br>**முனைவர் ஆறு. சரவணக்குமார்**<br>**முனைவர் கு.இரா. பத்மினி தேவி** | 1 |
| 2 | கவியரசர் கண்ணதாசனின் அனுபவமும் எழுத்தும்<br>**முனைவர் யா. சாம்ராஜ்** | 6 |
| 3 | காவிரிப்பூம்பட்டினத்து மக்களின் பண்புநலன்கள்<br>**முனைவர் த. மகிலாஜெனி**<br>**ந. அகிலா** | 10 |
| 4 | ஆ.மு.ஆ குடும்பத்தாரின் தொண்டும் சரவணன் செட்டியாரின் அறப்பணிகளும்<br>**சே. சுதா** | 16 |
| 5 | சுப. அண்ணாமலையின் உரைத்திறன்<br>**துரை. இரவிக்குமார்** | 20 |
| 6 | சோமலெவின் வாழ்வும் பணிகளும்<br>**ஜா. திக்லா தங்கமயில்** | 24 |
| 7 | தொல்காப்பியப் பெருங்கடல் வ.சுப.மாணிக்கனார்<br>**முனைவர் மு. செண்பகவள்ளி** | 29 |
| 8 | நகரத்தார் வாழ்வும் பணியும்<br>**வ. இந்திரா** | 34 |
| 9 | நகரத்தாரின் கொடை விளக்கு<br>**முனைவர் சொ. அருணன்** | 39 |
| 10 | நற்றமிழ் நாவலர் காப்பியக் கவிஞர் நா. மீனவனின் தமிழ்ப்பணி<br>**ப. கார்த்திகேயன்** | 43 |

# கவியரசர் கண்ணதாசனின் அனுபவமும் எழுத்தும்

**முனைவர் பா. சாம்ராஜ்**
உதவிப் பேராசிரியர் (தமிழ்த்துறை)
ஆறுமுகம்பிள்ளை சீதை அம்மாள் கல்லூரி
திருப்புத்தூர், சிவகங்கை மாவட்டம்

Volume: 8
Special Issue: 1
Month: March
Year: 2021
P-ISSN: 2321-788X

தாயின் வயிற்றிலிருந்து தரையிறங்கும் ஒவ்வொரு குழந்தையும், தன் எதிர்காலம் குறித்து நன்கு அறிந்து கொண்டு அவதரிப்பதில்லை, இடம், பொருள், சூழ்நிலை, காலம் போன்றவையே தீர்மானிக்கின்றன. இப்பெரும் போராட்டத்தில் உயர்ந்தவர் தாழ்ந்தவராகலாம். தாழ்ந்தவர் உயர்ந்தவராகலாம். இவற்றைச் சமூகம் காசு கொடுக்காமல் கற்றுக் கொடுத்துவிடும். இந்தச் சராசரி மனித வாழ்வில் கவியரசர் கண்ண தாசனின் அனுபவமும் எழுத்தும் குறித்து இக்கட்டுரை விளங்குகிறது.

## கவிதை மலர்ந்தது

செம்மண் பாசம் கொண்ட சிவகங்கை மாவட்டம் திருப்புத்தூருக்கு அருகிலுள்ள சிறுகூடல்பட்டியில் திரு.சாத்தப்பன் திருமதி. விசாலாட்சி அம்மையாருக்கு எட்டாவது மகனாக 1927 ஆம் ஆண்டு ஜுன் 24-ஆம் தேதி பிரபவ வருஷம், ஆனி மாதம் பத்தாம் தேதி முத்தையா என்ற கவிமலர் மணம் வீசத் தொடங்கியது. நடுத்தரக் குடும்பத்துப் பிறப்புதான் என்றாலும் “சின்ன முதலாளி” என்ற நிலைமை இருந்தது. சிறுபருவத்தில் மிகவும் அழகாக இருந்தமையால் அனைவரும் “பிராமணக் குழந்தை” போல இருக்கிறது எனப் பிரகடனம் செய்தார்கள்.

## குடும்பச் சூழலும் கவிஞானமும்

நன்கு வாழ்ந்த குடும்பம், காலச் சூழலால் தேய ஆரம்பித்தது. தன் தந்தைக்கான மரியாதை தன் சமூகத்திலே கிடைக்காமல் போனது கண்டு, தனது ஏழாவது வயதிலேயே குடும்பத்தை எண்ணி ஏங்கி அழும் நிலை ஏற்பட்டது. அக்குழந்தையின் அழுகைக்குக்கைக்குட்டையாய் காட்சி தந்தாள், அந்த ஊரின் அருகாமையில் உள்ள கிராம தெய்வம் மலையரசி அம்மன். அத்தெய்வத்தின் அருள் இல்லையெனில் முத்தையாவாகவும், சுவிகாரம் பெற்ற பிறகு நாராயணனாகவும் வாழ்ந்து மடிந்திருப்பாரே தவிர, இவ்வகிலம் உயிரோடிருக்கும் வரையிலும் கவியரசர் கண்ணதாசனாக இறந்தும் வாழ்ந்து கொண்டிருப்பதற்கு மலையரசி அம்மனே முழுமுதற்காரணம். இரவு பத்து மணிக்குக் கூட அந்தக் கோயிலுக்குச் சென்று தனது குடும்பத்தை நினைத்து அழுவார். ஏழுவயது சிறுவனுக்குரிய குணமே அவரிடம் இருக்காது.





இதுகுறித்துக் கவியரசர், “ஏதோ ஒரு சக்தி நம்மை இயக்குகிறது என்ற எண்ணம் ஏழுவயதிலேயே என்னிடம் உண்டு. கேட்டால் ஆச்சரியப்படுவீர்கள்!எந்தப் புண்ணியவானோ அந்தக் கோயிலுக்கு ஒரு பெரிய மின்சார விளக்குப் போட்டிருந்தார். அந்த விளக்கினடியில் உட்கார்ந்து கொண்டு நான் அழுதுகொண்டே இருப்பேன். என் தாய் தந்தையரைக் காப்பாற்றும்படியும் பிரார்த்திப்பேன். இரவு பத்து மணி என்பது கிராமத்தின் மிக அதிகமான நேரம். சமயங்களில் என் தந்தை அரிக்கேன் விளக்கை எடுத்துக் கொண்டு என்னைத் தேடி அலைவார். கடைசியில் நான் தினசரி மலையரசி அம்மன் கோயிலுக்குப் போவது அவருக்குத் தெரிந்தது. “நம்ம தலையெழுத்து எப்படி இருக்கிறதோ அப்படித்தான் நடக்கும், இதற்காக நீ ஏன் கோயிலுக்குப் போய் அழுகிறாய்?” என்று என் தந்தை கேட்பார். “நானோ ரத்த பாசத்தில் செத்து செத்துப் பிழைப்பேன்” (எனது வசந்த காலங்கள் பக் : 7,8) என்பதிலிருந்து குடும்பத்தின் மீதும் தெய்வத் தின் மீதும் வைத்துள்ள அளவில்லாத பற்று புலனாகிறது. இதன் தொடர்ச்சியாக எட்டாம் வகுப்பு படித்த ஒருவன் கவியரசனானது மலையரசி அம்மனின் மகிமையில்தான் என்பதோடு, காளிதான் காளிதாசனை உருவாக்கினாள்,அதேபோல என்னை மலையரசியே உருவாக்கினாள். ஆகவே ஏதாவது ஒரு தெய்வத்தின் மீது மனதை முழுமையாகச் செலுத்துங்கள். நீங்கள் எதிர்பாராத நேரத்தில் அது கை கொடுக்கும் என்று பாடம் நடத்துகிறார்.

## தாய்மை போற்றுதல்

“எவள் இல்லையென்றால் நீ இந்தப் பூமியில் பிறந்திருக்க முடியாதோ, எவளை இழந்துவிட்டால் மீண்டும் நீ இந்தப் பூமியில் பிறந்திருக்க முடியாதோ, எவளை இழந்துவிட்டால் மீண்டும் நீ பெறவே முடியாதோ, அவள் பெயரே தாய்” - சுவாமி விவேகானந்தர் (எனது வசந்தகாலங்கள் தொகுப்பிலிருந்து - ப:20)

எல்லோருக்கும் தாயை மிகவும் பிடிக்கும். அந்தத் தாயின் அன்பு கவியரசருக் குச் சற்று வித்தியாசமான அனுபவத்தைக் கொடுத்தது. தனது குடும்பத்தில் எட்டாவது மகனாகப் பிறந்து வறுமையிலும் செல்லமாக வளர்க்கப்பட்டு வந்த சூழலில், பிள்ளை இல்லாத பணக்காரர்கள் சுவிகாரம் எடுத்துக் கொள்வது நாட்டுக்கோட்டை நகரத்தாரின் வழக்கமான பழக்கமாக இருந்தது. அதன்படி தனது இருபத் திரண்டாவது வயதில் ஏழாயிரம் ரூபாய்க்கு, திரு.பழனியப்பச் செட்டியார் திருமதி.தெய்வானை ஆச்சிக்கு சுவிகாரப் புத்திரனாக்கப்பட்டார்.

பெற்ற தாயை அம்மா என்றோ ஆத்தா என்றோ அழைக்கலாம். ஆனால் வளர்ப்புத் தாயை வாய் நிறைய ஆத்தா என்றழைக்க வாய்வரவில்லை. மனமிசையவுமில்லை. நாளடைவல் திருமதி. தெய்வானை ஆச்சி பங்காளிகள் பலரிடமும் சொல்லி அழ, சில நாட்களுக்குப் பிறகே ஆத்தா என்று அழைக்க ஆரம்பித்தார். திருமதி. விசாலாட்சி ஆச்சியின் முகம் தெய்வானை ஆச்சியிடம் தெரிய ஆரம்பித்தது.

இதனைக் கவியரசர், “கண்ணனுக்குக் கிடைத்த தேவகியும், யசோதையும் போலவே எனக்கும் விசாலாட்சி ஆச்சியும், தெய்வானை ஆச்சியும் வாய்த்தார்கள்” (எனது வசந்த காலங்கள் ப:24) என்று குறிப்பிடுகிறார்.

## எழுதுவதில் பேரார்வம்

ஏழு வயதில் மலையரசி அம்மனின் பேரருள் கவியரசரைப் பற்றிக் கொள்ள எழுத்தார்வம் பிறந்தது. வாசிப்பதே

வழக்கமாகிப் போனது. கற்பனையோடு சிந்திக்க, அழகியலோடு எழுத்துருவாக்கி இன்பம் காண மலையரசி அம்மன், இந்தக் கவிதைக் குயிலுக்குக் கட்டளை பிறப்பித்தாள். சிறுகூடல்பட்டியிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தூரம் பாப்பாத்தி ஊரணி; அவ்விடத்தில் இயற்கையழகு இயல்பாகவே இருந்தது. நெல்லி மரங்கள் கொத்துக் கொத்தாய்க் காய்த்து கூட்டுக் குடும்பமாய்க் காட்சியளித்தன. அங்குதான் கவிதைக் கிறுக்கல்கள் கண்சிமிட்ட ஆரம்பித்தன. தனது பதின்மூன்றாவது வயதில் எழுதிய கவிதை,

**"வீணா கானம்விடியுமுன் கேட்டது**
**கானாமிர்தம் காதுக்கு இனிமை**
**தூக்கம் கலைந்து துள்ளி எழுந்தேன்**
**படுக்கையில் இருந்தே பருகினேன் அமுதம்"**

**(எனது வசந்த காலங்கள் ப : 27)**

இவ்வாறு ஏதாவது எழுதிக் கொண்டிருக்க, அவ்வழி செல்லும் செட்டியார்கள், கிறுக்கன் ஏதோ கிறுக்கிக் கொண்டிருக்கிறான் எனக் கேலி செய்வதுமுண்டு. அப்போது சிறுகூடல்பட்டியில் பாரதமாதா வாசக சாலையில், சுதேசமித்திரன், ஆனந்த விகடன், ஹனுமான், ஹிந்துஸ்தான் போன்ற பத்திரிகைகளை முழுமையாகப் படித்து நன்கு புரிந்து கொள்வதோடு அடுத்த கட்டமாக, அவை எழுத்து! எழுத்து!! எழுத்து!!! என்றாகிவிடும்.

"எழுதுகோல் தெய்வம்; என் எழுத்தும் தெய்வம்" என்ற பாரதி, கவியரசருக்குப் பங்காளியாகிப் போனார். இது குறித்துக் கவியரசர் கூறும்போது... "சின்ன வயதிலேயே எனக்கு எழுத்துவெறி துவங்கியது. வீட்டில் இரவில் எல்லோரும் தூங்கியதும் அரிக்கேன் விளக்கைத் தலையணை அருகே எடுத்து வைத்துக் கொண்டு எதையாவது எழுதுவேன். "போதும்! போதும்!! இனி மண்ணெண்ணெய் வாங்கிக் கட்டாது" என்று என் தந்தை கோபிப்பார். "பிள்ளை எழுதுறதையும், படிக்கிறதையும் ஏன் கெடுக்கிறிய?" என்று தாயார் சிபாரிசு செய்வார்கள். அவர்களுக்குத் தெரியுமா? "தெருவிளக்கின் அடியில் ஒரு நீதிபதி உருவானதைப் போல், அரிக்கேன் விளக்கின் ஒளியில் ஒரு மகாகவி உருவாகிக் கொண்டிருக்கிறான் என்று" (எனது வசந்த காலங்கள் பக் : 28,29)

இவ்வாறு தொடங்கிய எழுத்து வெறி, நமக்குத் தொழில் கவிதை, நாட்டுக் குழைத்தல், இமைப் பொழுதும் சோரா திருத்தல் என்ற பாரதியின் வரிகளுக்குள் வாழ்க்கைப்பட்டுக் கொண்டது.

### அனுபவமும் எழுத்தும்

வாசிப்பும் எழுத்தும் ஒருபுறமிருப்பின் தான் இருபத்தி இரண்டாவது வயதில் சுவிகாரப்புத்திரனாக்கப் பட்டாலும், அதற்கு முன்பே, அதாவது தனது பதினாறு வயதிலேயே தவறான வழியில் பயணப் பட்டதுதான் வரலாறு. அங்கு தொடங்கிய மது, மாது, பின்னாளில் கவியரசரைப் பக்குவமடையச் செய்தது. எத்தனையோ ஏற்ற இறக்கம், வெற்றி தோல்விகள் என ஒவ்வொரு காலக் கட்டத்திலும் அனுபவம் தனக்குக் கற்றுத் தந்ததைத் தனது படைப்புகள் வழி, பாடல்கள் வழி உலவவிட்டார். "1961-ல் இருந்து 72 வரை நிம்மதியற்ற நிலையில்தான் அத்தனை பாடல்களையும் எழுதினேன். பல்லவிகள் என்னை வைத்தேதான் எழுந்தன, விழுந்தன. நான் நிம்மதியில்லாமல் எழுதிய பாடல்களையே நீங்கள் நிம்மதியாகக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்" (எனது வசந்த காலங்கள் பக் : 50,53) எவ்வளவு பெரியஉண்மை!சராசரியாகஒருமனிதனின் அனுபவமே மற்ற மனிதர்களுக்கு வழிகாட்டியாக அமைகிறது.





### முடிவுரை

பத்துப்பேர் சொல்லும் புத்திமதியைக் கேட்க வேண்டியவன், பத்துப் பேருக்குப் புத்தி சொல்லும் நிலைக்கு வருவதே வாழ்க்கை. "உலகத்தை முற்றும் உணர்ந்து கொண்ட பின்னாலேதான் என் எழுத்துக்கள் பிரகாசிக்கத் தொடங்கின. இன்றைய இளைஞர்கள் வாழ்வில் எச்சரிக்கையாக இருப்பதற்கு என் வசந்த காலச் சிந்தனைகள் உதவும் என்ற நம்பிக்கை உண்டு" (எனது வசந்த காலங்கள் பக் : 47,48) தான் சின்ன வயதில் மலையரசியிடம் ஞானம் பெற்று, பிறகு எழுத்தில் ஆர்வம் கொண்டு, படிப்பறிவில்லை எனினும், பட்டறிவில் தேர்ச்சி கண்டு வாழக்கூடாத வாழ்க்கை வாழ்ந்து, செல்வத்தை இழந்து, துன்பமிகு உழன்று, ரத்தம் சுண்டச் சுண்ட, பக்குவப் பாதையில் பயணித்து, தான் கடந்து வந்த பாதையைத் திரும்பப் பார்க்கின்றபோது என்னைப் போல, பிறர் வாழ வேண்டாம் என்று அறிவுரை பகர்வதில், பிறர் வாழப் போகும் வாழ்க்கைக்கு வழி வகுத்துக் கொடுக்கிறது.